



# தமிழ் மக்கள் குரல்

தினசரி காலை நாளிதழ்

tamilmakkalkurall@gmail.com

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி






மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிறு, செப்டம்பர் 27, 2026 | இதழ் 167


## 2 தொகுதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தவெகவுக்கு சென்ற அதிமுகவினருக்கு துணைப் பொதுச்செயலாளர் பதவி: தவெக தலைவர் விஜய் அறிவிப்பு



சென்னை, 27 செப்டம்பர் 2026: இரண்டு சட்டமன்ற தொகுதிகளின் இடைத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அதிமுகவில் இருந்து தவெகவுக்கு சென்றவர்களுக்கு துணைப் பொதுச்செயலாளர் பதவி வழங்கி தவெக தலைவர் விஜய் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். தமிழக சட்டமன்றத் தேர்தலில் 107 இடங்களில் வென்ற தவெக காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ளது. இந்நிலையில், தேர்தலுக்குப் பிறகு அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அதிமுகவில் இருந்து விலகி தவெகவில் இணைந்தனர்.

ஆனால், தவெகவில் இணைந்த முன்னாள் அதிமுக நிர்வாகிகள் ஒரு சிலரை தவிர மற்றவர்களுக்கு எந்தப் பொறுப்புகளும் வழங்கப்படவில்லை. அப்படிப் பொறுப்புகள் வழங்கப்பட்டவர்களுக்கும் அலங்காரப் பதவிகளே வழங்கப்பட்டன. ஆனால், அந்த அலங்கார பதவிகள் கூடக் கிடைக்காதவர்கள் அதிருப்தியில் இருப்பதாக செய்திகள் வெளியானது. இந்நிலையில், தற்போது மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்ற யூொகுதிகளின் இடைத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அதிமுகவில் இருந்து தவெகவுக்குச் சென்றவர்களுக்கு பொறுப்புகளை வழங்கி தவெக தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

அதில் கூறியுள்ளதாவது: தமிழக வெற்றிக் கழகத்தின் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் பின்வருபவர்கள் துணைப் பொதுச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர் பொறுப்புகளில் நியமிக்கப்படுகிறார்கள். துணைப் பொதுச் செயலாளர்களாக ஆனந்தன், எம்.சி.சம்பத், உடுமலை ராதாகிருஷ்ணன், கே.வி.ராமலிங்கம், எம்.ஆனந்தன், கடம்பூர் ராஜு, கே.டி.பச்சைமால், வெல்லமண்டி நடராஜன், சிவபதி, வைகைச்செல்வன், எஸ்.வளர்மதி, சந்தீப் ஆனந்த், முத்து வெங்கடேஸ்வரன், தொள்ளமூர் கண்ணன், குமரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலும், மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதியை உள்ளடக்கிய திருப்பூர் புறநகர் தெற்கு மாவட்ட கழகம் உருவாக்கப்பட்டு அதற்கு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சி.மகேந்திரன் மாவட்ட செயலாளராக நியமனம் செய்யப்படுகிறார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஐக்கிய நாடுகள் சபையில் கண்டனம்; பாகிஸ்தானின் தீவிரவாத இரட்டை வேடத்திற்கு இந்தியா எச்சரிக்கை: தூதரகத்தின் முதல் செயலாளர் அதிரடி

சென்னை 27, செப்டம்பர் 2026: ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் பேசிய அடுக்கடுக்கான பொய்களுக்கு, இந்தியா தனது பதிலடி கொடுக்கும் உரிமை மூலம் மிகக் கடுமையான கண்டனத்தை சர்வதேச அரங்கில் பதிவு செய்துள்ளது. பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாத அமைப்புகள் காஷ்மீரில் ஊடுருவி தாக்குதல் நடத்துவதும், அதற்கு இந்திய ராணுவம் தக்க பதிலடி கொடுப்பதும் பல ஆண்டுகளாக நீடித்து வரும் தொடர்கதையாக உள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் உரையாற்றிய பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், வழக்கம் போல காஷ்மீர் விவகாரம், சிந்து நதி நீர் ஒப்பந்தம் மற்றும் ஆபரேஷன் சிந்தூர் உள்ளிட்ட விவகாரங்களை தேவையின்றி கிளப்பி அவதூறு பரப்பினார். இதற்கு உடனடியாக பதிலடி கொடுத்த ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்திய தூதரகத்தின் முதல் செயலாளர் பெட்டல் கெஹ்லாட், 'பாகிஸ்தானின் எல்லை தாண்டிய தீவிரவாதக் கொள்கையே அனைத்துப் பிரச்னைகளுக்கும் மூலகாரணமாகும்; தீவிரவாதிகள் ஓடவும் முடியாது, ஒளியவும் முடியாது என்பதை கடந்த ஆண்டு நிரூபித்துக் காட்டியுள்ளோம்; பாகிஸ்தானின் வஞ்சகமும் இரட்டை வேடமும் அந்நாட்டிற்கும் உதவாது.

உலகிற்கும் எந்தப் பயனையும் தராது; தீவிரவாத அச்சுறுத்தலுக்கு எதிராக எங்களை தற்காத்துக் கொள்ளும் முழு உரிமையையும் இந்தியா தொடர்ந்து உறுதியாகப் பயன்படுத்தும்' என்று எச்சரித்தார். தொடர்ந்து பேசிய அவர், 'தனது சொந்த நாட்டு மக்களுக்கு எதிராகவே தலைநகரை ராணுவக் கோட்டையாக மாற்றி, ஜனநாயக உரிமைகளை நசுக்கும் ராணுவ சர்வாதிகார பொம்மை அரசுக்கு சிறுபான்மையினர் பாதுகாப்பு பற்றியோ, மத சகிப்பின்மை குறித்தோ பேச எந்தவித தார்மீக உரிமையும் இல்லை. சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இந்திய நிலப்பரப்பான ஆக்கிரமிப்பு காஷ்மீரை பாகிஸ்தான் உடனடியாக காலி செய்ய வேண்டும்.

தீவிரவாதத்திற்கு துணை போனால் மிக மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும்' என்று பேசினார்.




## மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் பிரசாரம் மக்களுக்கு நல்லது செய்யவே கடன் வாங்குகிறேன்: முதல்வர் விஜய் பேச்சு



சென்னை, 27 செப்டம்பர் 2026: மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு தவெக சார்பில் நேற்று செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூரில் பிரசார பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட தவெக தலைவரும் தமிழக முதல்வருமான விஜய், வேட்பாளர் மரகதம் குமரவேலுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவர் பேசியதாவது:

நான் முதல்வராகப் பதவியேற்ற அன்றைக்கு கொஞ்சம் அவகாசம் கேட்டேன். கடன் வாங்கியதால் இந்த கஜானா நிலைமை மோசமாக உள்ளது. கொஞ்சம் நிதி நெருக்கடி எல்லாம் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையில்தான் நான் பதவியேற்கிறேன். அப்போதும் கூட என்னால் முடிந்ததை முயற்சி செய்தேன். இப்போது விஜய்யும் வந்து கடன்தான் வாங்குகிறார் எனச் சொன்னார்கள். ஆம், நான் கடன் வாங்குகிறேன். கொள்ளையடிப்பதற்காக இல்லை, மக்களுக்கு நல்லது செய்வதற்காகத்தான். ஆறு சிலிண்டர் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தேன். ஆனால், இப்போதுள்ள நிலைமையில் மூன்றுதான் கொடுக்க முடிந்தது.

மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றிக் கூட்டணித் துணையோடு அமைந்துள்ள இந்த ஆட்சிக்கு உரிமையாளர்கள் மக்கள்தான். அப்படிப்பட்ட மக்கள் அமைத்துக் கொடுத்த இந்த ஆட்சி கலையும் எனச் சொன்னவர்களின் கனவுதான் கலையும். நம்ம கட்சியை இன்னும் பலமாக்குவதற்கு தயவு செய்து விசில் சின்னத்துக்கு ஓட்டுப் போடுங்கள். நம்ம மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றிக் கூட்டணி வேட்பாளரான மரகதம் குமரவேலை பெருவாரியான வாக்கு வித்தியாசத்துல மீண்டும் எம்எல்ஏவாக்க வேண்டியது உங்களின் பொறுப்பு.

தமிழக வெற்றிக் கழக அரசு பதவியேற்ற பின் செங்கல்பட்டு மாவட்டத்திற்கு கீழ்க்கண்ட அறிவிப்புகள் கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் வெளியிடப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் பல்வேறு நிலையில் உள்ளன. செங்கல்பட்டு மாவட்டத்தில் வாடகை கட்டிடங்களில் இயங்கிவரும் கல்லூரி மாணவ, மாணவியருக்கான சமூக நீதி விடுதிகளுக்கு சொந்த கட்டிடங்கள் கட்டி தர அறிவிக்கப்பட்டு உள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தில் உணவு தானியங்களை சேமிப்பதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் சேமிப்புக் கிடங்கு கட்ட அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு தாய் - சேய் நலக் கட்டிடம், புதிய உயர் அடுக்கு ஒருங்கிணைந்த வெளி நோயாளிகள் பிரிவுக் கட்டிடம், மாணவர்களுக்கான தங்கும் விடுதி, தாய் மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்புப் பிரிவுகள் சுமார் 100 கோடி ரூபாய் செலவில் அமைக்க அறிவிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், மதுராந்தகம் ஏரியில் உள்ள மதகு எண் ஐந்து பாசன கால்வாயை கான்கிரீட் கால்வாயாக சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும், சென்னை மாநகரை ஒட்டிய தொகுதியாக இருந்தும், மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை என்கிற நிலை உள்ளது என என் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. குறிப்பாக விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையான பாலாற்றின் குறுக்கே உயர்மட்ட தடுப்பணை அமைக்காமலும், ஏரிகளின் மாவட்டம் என்ற சிறப்பு பெயர் இருந்தும் கூட ஏரிகளை புனரமைக்காமலும், கால்வாய்களை தூர்வாராமலும், சீரமைக்காமலும் வஞ்சித்துள்ளனர்.

மாவட்டத்தில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில் திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்படவில்லை. பல்வேறு பகுதிகளில் பணிபுரியும் பெண்களுக்கும் தங்கும் விடுதி வசதி செய்து தரப்படவில்லை. இந்த பகுதி சென்னைக்கு அருகாமையிலும் இருந்தும், அதிக மக்கள் தொகை கொண்ட மாவட்டமாக இருந்தும், குடியிருப்புகள் தேவை இருந்தும் முந்தைய ஆட்சியாளர்கள் வீடற்றவர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகளை போதுமான அளவில் கட்டி தராமல் இருக்கும் நிலை உள்ளது. மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே நமது அரசு உள்ளது. உங்களின் தேவைகளை அறிந்து செயல்படும் அரசிற்கு உங்கள் பேராதரவை அளிக்கக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

## கேரளம் மாநிலத்திற்கு குடியரசு துணைத்தலைவர் சி பி ராதாகிருஷ்ணன் பயணம் மேற்கொள்கிறார்

சென்னை 27, செப்டம்பர் 2026: குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், இம்மாதம் 27-ம் தேதி அன்று, ஒரு நாள் பயணமாக கேரளம் செல்கிறார். அவரது இந்தப் பயணத்தின்போது, கொல்லத்தில் உள்ள மாதா அமிர்தானந்தமயி மடத்தில், மாதா அமிர்தானந்தமயியின் 73-வது பிறந்ததினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விஸ்வ சேவா தினக் கொண்டாட்ட நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். இந்நிகழ்ச்சியில், ஆண்டு விழா கொண்டாட்டங்கள் மற்றும் பல்வேறு நலவாழ்வு சார்ந்த திட்டங்களும் தொடங்கப்பட உள்ளன. மேலும், திருவனந்தபுரத்தில் உள்ள ஸ்ரீ உத்ராடம் திருநாள் மருத்துவ அறிவியல் அகாடமியின் பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகவும் குடியரசு துணைத் தலைவர் பங்கேற்கிறார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
ஞாயிறு,
செப்டம்பர் 27, 2026

# சென்னையில் கியா இந்தியாவின் 'வைப் ஸ்டுடியோ'

சென்னை 27, செப்டம்பர் 2026: நாட்டின் முன்னணி மாஸ்-பிரீமியம் வாகனத் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான கியா இந்தியா, ஹைப் இந்தியா நிறுவனத்துடனான தனது தொடர் கூட்டாண்மையின் ஒரு பகுதியாக, சென்னையில் தனது புதிய கலாச்சார அனுபவத்தை அறிமுகப்படுத்துகிறது. கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்வுக்கு கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து, தற்போது சென்னை நிகழ்வில் ஹைப் இந்தியா ஆடிஷன்: ஃபைனல் கால் இடம் பெறுகிறது. இதன் மூலம் இளம் பங்கேற்பாளர்கள் தங்களது படைப்பாற்றலை வெளிப்படுத்தவும், உலகளாவிய வாய்ப்புகளை ஆராயவும் வாய்ப்பு பெறுகின்றனர்.

சென்னையில் உள்ள இவிபி டிரேட் அன்ட் கன்வென்ஷன் சென்டர்-ன் ஹால் டி-ல், செப்டம்பர் 26, 2026 அன்று நடைபெறும் ஹைப் இந்தியா பாப்-அப் பார்க் நிகழ்வில், கியா நிறுவனத்தின் கியா வைப் ஸ்டூடியோ இடம்பெறுகிறது. கியா சைரஸ் இவி மற்றும் கியா சொரண்டோ வாகனங்களுக்குள் அமைக்கப்பட்டுள்ள இந்தப் படைப்பாற்றல் மையத்தில், பார்வையாளர்கள் உயர்தர காணொளிகளை உருவாக்கி, தங்களது இசை மற்றும் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் பதிவு செய்து பகிர்ந்துகொள்ள முடியும்.

இந்த அனுபவம் அக்டோபர் 3, 2026 முதல் எஸ்விஎம் கியா, சென்னை நிறுவனத்திலும் விரிவுபடுத்தப்படுகிறது. இதன் மூலம் அதிகமானோர் இந்த முயற்சியில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுவர். கியா இந்தியாவின் பலவகை ஆற்றல்மூல வாகன அணுகுமுறையை கியா சைரஸ் இவி மற்றும் கியா சொரண்டோ ஹெச்இவி பிரதிபலிக்கின்றன. சைரஸ் இவி மின்சார எஸ்யூவி வரிசையை விரிவுபடுத்தும் நிலையில், சொரண்டோ கலப்பின மற்றும் டீசல் ஆற்றல் தேர்வுகளை வழங்குகிறது.

ஹைப் இந்தியா உடனான கூட்டாண்மையின் மூலம், இசை, படைப்பாற்றல், கலாச்சாரம் மற்றும் இளம் தலைமுறையின் புதிய விருப்பங்களுடன் இணைந்து செயல்படும் தளங்களை உருவாக்குவதன் மூலம் இளம் பார்வையாளர்களுடனான தனது தொடர்பை கியா இந்தியா தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது.

## 2022ம் ஆண்டு முதல் நடப்பு ஆண்டு வரை நாடு முழுவதும் 33 எம்பிக்கள், 78 எம்எல்ஏக்கள் கட்சி தாவல்: 111 மக்கள் பிரதிநிதிகளில் 81 பேர் பாஜக, என்பிஎப், என்சிபிஐ-யில் ஐக்கியம்

சென்னை 27, செப்டம்பர் 2026: இந்தியாவில் 2022ம் ஆண்டு முதல் 111 எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்கள் னுதிர்க்கட்சிகளுக்கு தாவியுள்ளதாக ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் பகீர் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் தேர்தல் களத்தில் மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெறும் அரசியல்வாதிகள், தங்களின் சொந்த நலனுக்காகவும் அதிகாரத்திற்காகவும் அவ்வப்போது எதிர்க்கட்சிகளுக்கு தாவுவது தொடர்கதையாக இருந்து வருகிறது. இதனைத் தடுக்கும் வகையில் கட்சித் தாவல் தடைச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும், பல்வேறு வழிகளில் மக்கள் பிரதிநிதிகள் கட்சி மாறுவது வாடிக்கையாகிவிட்டது. இந்த சூழலில், கடந்த 2022ம் ஆண்டு முதல் தற்போது வரையிலான காலகட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளின் அணி மாறுதல் நடவடிக்கைகள் குறித்து ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ஏ.டி.ஆர்.) தீவிர ஆய்வு மேற்கொண்டு வந்தது.

அந்த ஆய்வறிக்கையில் வெளியாகியுள்ள புள்ளிவிவரங்கள் இந்திய அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. நாடு முழுவதும் கடந்த 2022ம் ஆண்டு முதல் 2026ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், 26 மக்களவை எம்.பிக்கள், 7 மாநிலங்களவை எம்.பி.க்கள் மற்றும் 78 எம்.எல்.ஏ.க்கள் என மொத்தம் 111 மக்கள் பிரதிநிதிகள் அணி மாறியுள்ளனர். இதில் சுயேச்சையாக கட்சி தாவியவர்கள், ஒட்டு மொத்த கட்சியை இணைத்தவர்கள், பதவியை ராஜினாமா செய்துவிட்டு இடைத்தேர்தலில் வென்றவர்கள் மற்றும் தகுதி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் தேர்வானவர்கள் அடங்குவர். அதிகபட்சமாக நாகாலாந்து மாநிலத்தில் ஆளும் தேசியவாத ஜனநாயக முற்போக்கு கட்சியுடன் ஏற்பட்ட அரசியல் உடன்பாடு காரணமாக 32 எம்.எல்.ஏ.க்கள் கட்சி மாறியுள்ளனர். இவ்வாறு கட்சி மாறிய மக்கள் பிரதிநிதிகளை வளைத்துப் போட்டதில் நாகா மக்கள் முன்னணி (என்.பி.எப்.) 32 பேருடனும், பாஜக 29 பேருடனும் அடுத்தடுத்த முன்னிலை இடங்களில் உள்ளன. மேலும் என்.சி.பி.ஐ. கட்சிக்கு 20 பேரும், காங்கிரசுக்கு 9 பேரும், உத்தவ் தாக்கரேவின் சிவசேனா அணிக்கு 8 பேரும், என்.பி.பி.க்கு 6 பேரும், அருணாச்சல மக்கள் கட்சிக்கு 4 பேரும் சென்றுள்ளனர். அதாவது கட்சி மாறிய 111 பேரில் 81 பேர், அதாவது 73 சதவீதம் பேர் என்.பி.எப்., பாஜக மற்றும் என்.சி.பி.ஐ. ஆகிய மூன்று கட்சிகளிலேயே தஞ்சம் புகுந்துள்ளனர். தெலங்கானாவில் பி.ஆர்.எஸ். கட்சியைச் சேர்ந்த 9 எம்.எல்.ஏ.க்கள் காங்கிரசிலும், கோவாவில் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் 8 பேர் பாஜகவிலும் ஐக்கியமாகினர். பஞ்சாபில் 6 மாநிலங்களவை எம்.பி.க்கள் உள்பட 8 பேரும், மகாராஷ்டிராவில் உத்தவ் அணியில் இருந்து 6 மக்களவை எம்.பி.க்களும் அணி மாறியுள்ளனர்.

இதனிடையே, மேற்குவங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் இருந்து வெற்றி பெற்ற 20 எம்.பி.க்கள் தேசியவாத இந்திய குடிமக்கள் கட்சிக்கு (என்.சி.பி.ஐ.) ஒட்டுமொத்தமாக இடம் பெயர்ந்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் தெரிவிக்கையில், 'நாங்கள் தனிப்பட்ட முறையில் கட்சி தாவவில்லை, எங்கள் பிரிவை முறைப்படி கட்சியாக இணைத்துள்ளோம்' என்று விளக்கம் அளித்துள்ளனர். இந்த விவகாரம் தொடர்பான மனு தற்போது மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

இது தவிர மேகாலயா, மணிப்பூர், குஜராத் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலும் மக்கள் பிரதிநிதிகள் அணி மாறியுள்ள நிலையில், வாக்களித்த மக்களை ஏமாற்றும் வகையில் அரங்கேறும் இந்த பதவி வேட்டை கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க தேர்தல் சீர்திருத்தங்கள் கடுமையாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

## 12 ஆண்டுகால 'மேக் இன் இந்தியா விளம்பரம்” என்பது மோடி அரசு இந்திய மக்களுக்குச் செய்த வரலாற்றுப் பெருந்துரோகம் தொடர்ந்து நீடிக்கிறது - மாணிக்கம் தாகூர் ப



சென்னை 27, செப்டம்பர் 2026: கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டித் தீர்த்த வெற்று விளம்பரங்களால் கட்டமைக்கப்பட்ட போலி மாயையை, ஒன்றிய பாஜக அரசின் அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களே அக்குவேறு ஆணிவேறாகத் தோலுரித்துக் காட்டுகின்றன. நாட்டின் உற்பத்தித் துறையை அதல பாதாளத்திற்குத் தள்ளிவிட்டு, இளைஞர்களின் வேலை வாய்ப்புக் கனவுகளைச் சுக்குநூறாக்கிய இந்த 12 ஆண்டுகால மோசடி ஆட்சிக்கு இதோ ஆதாரப்பூர்வமான குற்றப்பத்திரிகை :

மந்தமான உற்பத்தி வளர்ச்சி தொடர்ந்து நீடித்து வருகிறது. பழைய மற்றும் புதிய வளர்ச்சி தொடர் இரண்டிலுமே, நாட்டின் ஒட்டு மொத்தப் பொருளாதார வளர்ச்சியை விட உற்பத்தித் துறை வளர்ச்சி தொடர்ந்து பின்னுக்குத் தள்ளப்பட்டு மந்தமாகவே நீடிக்கிறது. 2025-26ல் ஒட்டுமொத்த வளர்ச்சியை விட உற்பத்தித் துறை மொத்த மதிப்பு கூட்டலை மைனஸ் 0.3 சதவிகித அளவுக்குப் பாதாளத்திற்குச் சரிந்துள்ளது. தொழில் உற்பத்தி குறியீடு தொழில்துறை உற்பத்தியிலும் புதிய தொடரின் படி உற்பத்தித் துறை வளர்ச்சி மைனஸ் 1.3 சதவிகிதம் பின்தங்கி நிற்கிறது. மேக் இன் இந்தியாவால் எந்தவொரு கூடுதல் எழுச்சியும் ஏற்படவில்லை.

வீழ்ச்சியடைந்த உற்பத்திப் பங்கு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது. 2014-ல் இத்திட்டம் தொடங்கப்பட்டபோது, நாட்டின் மொத்த மதிப்பு கூட்டலில் உற்பத்தித் துறையின் பங்கு 17.3 சதவிகிதமாக இருந்தது. ஆனால், 12 ஆண்டுகள் கழித்து 2025-26ல் அது 17.1 சதவிகிதமாக குறைந்து படுதோல்வி அடைந்துள்ளது (பழைய தொடர்). புதிய தொடரிலும் 12 ஆண்டுகளில் வெறும் ஒரு சதவிகிதம் மட்டுமே பெயரளவு உயர்ந்து 15.6 சதவிகிதத்தில் தேங்கி நிற்கிறது.

உற்பத்தியின் பங்கை 25 சதவிகிதமாக உயர்த்துவோம் என்று கூச்சலிட்ட மோடி அரசின் வெற்று முழக்கம் எங்கே போனது?

ஏற்றுமதியில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. கச்சா எண்ணெய் அல்லாத பொருட்களின் ஏற்றுமதி வளர்ச்சி என்பது மேக் இன் இந்தியா திட்டத்திற்கு முன்பிருந்த அதே வழக்கமான வேகத்தில்தான் சென்று ஞொண்டிருக்கிறது. மிக முக்கியமாக, உலகளாவிய சரக்கு ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 2012 முதல் சுமார் 1.7 சதவிகிதத்தில் எந்த முன்னேற்றமும் இன்றி அப்படியே முடங்கிப்போய் நிற்கிறது. சர்வதேச சந்தையில் இந்தியாவை முன்னிறுத்த மோடி அரசு முற்றிலும் தவறிவிட்டது.

தொடர்ந்து சரிந்து விழும் தனியார் முதலீடுகள் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனியார் துறையின் மூலதன உருவாக்கம் அல்லது புதிய சொத்து உருவாக்கம் பழைய மற்றும் புதிய தொடர் இரண்டிலுமே தொடர் சரிவைச் சந்தித்து வருகிறது. மோடி அரசின் வெற்று வாக்குறுதிகளை நம்பி புதிய ஆலைகளைத் திறக்கவோ முதலீடு செய்யவோ தனியார் நிறுவனங்கள் முற்றிலும் அச்சமடைந்து பின்வாங்குகின்றன.

அந்நிய நேரடி முதலீடு வீழ்ச்சியினால் மோடி அரசு ஏமாற்றும் போக்குடன் நடந்து வருகிறது. அந்நிய நேரடி முதலீட்டிலும் எந்தப் பெரிய முன்னேற்றமும் ஏற்படவில்லை. கடந்த 12 ஆண்டுகளில் 7 ஆண்டுகள் ஒட்டுமொத்த அந்நிய நேரடி முதலீடு வளர்ச்சியை விட உற்பத்தித் துறைக்கான அந்நிய நேரடி முதலீடு வளர்ச்சி மிகவும் குறைவாகவே உள்ளது. 2014-15ல் ஒட்டு மொத்த அந்நிய நேரடி முதலீடு 27.3 சதவிகிதமாக இருந்தபோதே உற்பத்தி துறையில் அந்நிய நேரடி முதலீடு வெறும் 4.9 சதவிகிதம் என்ற அளவில்தான் இருந்தது. 2022-23ல் உற்பத்தி துறையில் அந்நிய நேரடி முதலீடு மைனஸ் 31.2 சதவிகிதம் வரை அதலபாதாளத்திற்கு வீழ்ந்தது.

முடங்கிக் கிடக்கும் தொழிற்சாலை கொள்ளளவு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது. இந்தியத் தொழிற்சாலைகளின் கொள்ளளவுப் பயன்பாடு, புதிய தனியார் முதலீடுகளைத் தூண்டக்கூடிய 80 சதவிகித அளவை கடந்த 12 ஆண்டுகளாகத் தொடவே முடியவில்லை. 2020-ல் 47.3 சதவிகிதம் வரை படுமோசமாகச் சரிந்து, 12 ஆண்டுகள் கடந்தும் 77.4 சதவிகிதம் மட்டுமே தேங்கி நிற்கிறது. இருக்கும் ஆலைகளே முழுமையாக இயங்காத போது புதிய தொழிற்சாலைகள் எங்கே வரும்

அன்றாடச் செலவுகளுக்கே வங்கிக் கடனை நம்ப வேண்டிய அவல நிலை இருக்கிறது. தொழில்துறைக்கான வங்கிக் கடன் ரூ.45.8 லட்சம் கோடியாக உயர்ந்திருந்தாலும், களத்தில் புதிய மூலதன முதலீடுகளோ, பிரம்மாண்ட ஆலைகளோ வரவில்லை. உற்பத்தித் தேக்கத்தால் நிறுவனங்கள் புதிய தொழில் தொடங்காமல், வெறும் அன்றாட செலவுகளுக்கும் நடைமுறை மூலதனத்திற்கும் கடன் வாங்கி சமாளிக்கும் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

உற்பத்திசார் ஊக்கத்தொகை திட்டத்தினால் பெயரளவில் தான் பயன்கள் கிடைக்கிறது. ரூ.2.4 லட்சம் கோடி முதலீடு என்று வீண் விளம்பரம் செய்து கொண்டாலும், அந்த முதலீடுகளும் வேலை வாய்ப்புகளும் குறிப்பிட்ட சில துறைகளில் மட்டுமே குவிக்கப்பட்டு முடங்கிப்போயுள்ளன. அடித்தட்டு மக்களுக்கான ஜவுளித் துறை, தகவல் தொழில்நுட்ப வன்பொருள், மருத்துவ உபகரணங்கள் போன்ற மிக முக்கியமான வாழ்வாதாரத் துறைகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு வஞ்சிக்கப்பட்டுள்ளன.

வேலைவாய்ப்பில் மாபெரும் பின்னடைவு தொடர்ந்து நீடித்து வருகிறது. உற்பத்தித் துறையில் பணியாற்றியவர்களின் எண்ணிக்கை 2016-17ல் 5.1 கோடியாக இருந்தது, 10 ஆண்டுகள் கழித்து 2025-26ல் வெறும் 5.3 கோடியாக மட்டுமே பெயரளவு உயர்ந்துள்ளது. மொத்த வேலைவாய்ப்பில் உற்பத்தித் துறையின் பங்கு 12.5 சதவிகிதத்திலிருந்து 12.1 சதவிகிதமாக குறைந்து, ஒரு தசாப்தத்திற்கு முந்தைய நிலைக்கே நாடு பின்னோக்கித் தள்ளப்பட்டுள்ளது. இளைஞர்களின் எதிர்காலம் பா.ஜ.க. அரசால் சூறையாடப்பட்டு வருகிறது.

மோடி அரசின் கபட நாடகங்கள், அவர்கள் வெளியிடும் சொந்த அரசுத் தரவுகளாலேயே நாளுக்கு நாள் மக்கள் மன்றத்தில் அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டப்பட்டு வருகின்றன. இனியாவது வெற்று விளம்பர மோகத்தை கைவிட்டுவிட்டு, நாட்டின் நலன் கருதி முறையான தொழிற்கொள்கைகளை வகுப்பதிலும், இந்திய இளைஞர்களின் எதிர்காலத்தைக் கட்டமைப்பதிலும் மோடி அரசு உண்மையான அக்கறை செலுத்த வேண்டும்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## பாரி வேட்டைக்கு பந்தக்கால் நட்டாச்சு! தேசிய விருது பெற்ற நடிகர் தனுஷ் - தமிழரசன் பச்சமுத்து கூட்டணியின் பெரும் எதிர்பார்ப்புக்குரிய ‘டி56’ படப்பிடிப்பு மதுரையில் தொடக்கம்!



சென்னை 27, செப்டம்பர் 2026: தமிழ் திரையுலகில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள ‘டி56’ திரைப்படத்தின் படப்பிடிப்பு இன்று மதுரையில் பூஜையுடன் தொடங்கியுள்ளது. தேசிய விருது பெற்ற நடிகர் தனுஷ் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தை 'லப்பர் பந்து' மூலம் கவனம் ஈர்த்த எழுத்தாளர் - இயக்குநர் தமிழரசன் பச்சமுத்து இயக்குகிறார்.

“பாரி வேட்டைக்கு பந்தக்கால் நட்டாச்சு” என்ற சுவாரஸ்யமான அறிவிப்புடன் இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கப்பட்டுள்ள நிலையில், இந்த அறிவிப்பு ரசிகர்கள் மற்றும் திரையுலகினர் மத்தியில் படத்தின் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது.

தனுஷ் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக பிரீத்தி முகுந்தன் நடிக்கும் இப்படத்தில், வடிவேலு, எஸ்.ஜே. சூர்யா முக்கிய கதாபாத்திரங்களில் இணைந்துள்ளனர். மேலும் விஜய் பி. குமார் மற்றும் பலர் நடிக்கின்றனர். அனுபவம் வாய்ந்த நடிகர்களுடன் இளம் திறமைகள் இணைந்துள்ள இந்தக் கூட்டணி, படத்தின் மீதான ஆர்வத்தை மேலும் கூட்டியுள்ளது.

மதுரையில் இன்று நடைபெற்ற பூஜை நிகழ்வுடன் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது. பாரம்பரிய முறைப்படி நடைபெற்ற இந்த பூஜையைத் தொடர்ந்து, படத்தின் முதல் கட்டப் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது. மதுரையைத் தொடக்கப் புள்ளியாகக் கொண்டு, இயக்குநர் தமிழரசன் பச்சமுத்துவின் கதைக்களமும் காட்சியுலகமும் படமாக்கப்படவுள்ளது.

இப்படத்தின் மற்றொரு முக்கிய சிறப்பம்சமாக, இளம் இசையமைப்பாளர் சாய் அபயங்கர் இசையமைக்கிறார. தனுஷ் நடிப்பில் உருவாகும் ‘ஓம்’ திரைப்படத்தைத் தொடர்ந்து, தனுஷ் - சாய் அபயங்கர் இணையும் இரண்டாவது திரைப்படம் இது. இந்தக் கூட்டணியின் இசை மீதான எதிர்பார்ப்பும் ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

சித்தாரா என்டர்டெயின்மென்ட்ஸ், ஸ்ரீகரா ஸ்டுடியோஸ் மற்றும் ப்ரிமார்க் புரொடக்ஷன்ஸ் ஆகிய மூன்று நிறுவனங்கள் இணைந்து இப்படத்தைத் தயாரிக்கின்றன. நாக வம்சி, சாய் சௌஜன்யா மற்றும் எஸ். ஹரிதா லிங்கசாமி ஆகியோர் இப்படத்தைத் தயாரிக்கின்றனர்.

தனுஷ் நடிப்பில் தமிழில் வாத்தி மற்றும் தெலுங்கில் சார் என்ற படத்தை தயாரித்த சித்தாரா என்டர்டெயின்மென்ட் - சாய் சௌஜன்யா நிறுவனம் தயாரித்து பிறகு மீண்டும் இப்படத்தின் மூலம் மீண்டும் இணைந்துள்ளனர்.

சித்தாரா என்டர்டெயின்மென்ட்ஸ், ஸ்ரீகரா ஸ்டுடியோஸ் சமீபத்தில் வெளியான ‘டி56’ படத்தின் அறிவிப்பு போஸ்டரும் ரசிகர்களிடையே பெரும் கவனத்தை ஈர்த்தது. ஏராளமான மணிகளால் அலங்கரிக்கப்பட்ட பிரம்மாண்டமான பாரம்பரிய கதவு, அதன் முன் இடம் பெற்றுள்ள தனுஷின் கதாபாத்திர வடிவமைப்பு என, போஸ்டர் படத்தின் கதைக்களம் மற்றும் உலகம் குறித்த பல்வேறு கேள்விகளை எழுப்பும் வகையில் அமைந்திருந்தது. குறிப்பாக, “பாரி வேட்டைக்கு பந்தக்கால் நட்டாச்சு” என்ற வாசகமும், போஸ்டரின் தனித்துவமான வடிவமைப்பும் படத்தின் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளன.

தனுஷ், வடிவேலு, எஸ்.ஜே. சூர்யா என வலுவான நட்சத்திரக் கூட்டணி, தமிழரசன் பச்சமுத்துவின் இயக்கம் மற்றும் சாய் அபயங்கரின் இசை என பல்வேறு சிறப்பம்சங்களுடன் உருவாகும் ‘டி56’, ஏற்கனவே ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

மதுரையில் முதல் கட்டப் படப்பிடிப்பு இன்று தொடங்கியுள்ள நிலையில், ‘டி56’ திரைப் படத்தின் உலகிற்குள் பார்வையாளர்களை அழைத்துச் செல்ல படக்குழு தயாராகி வருகிறது. படத்தின் மீதமுள்ள துணை நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் விரைவில் வெளியாகும் என படக்குழு தெரிவித்துள்ளது. ‘டி56’ திரைப்படம் 2027-ம் ஆண்டு கோடை காலத்தில் திரையரங்குகளில் வெளியாகும்.

## சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் ரத்து

சென்னை 27, செப்டம்பர் 2026: சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது. உணவு வழங்கும் திட்டத்துக்கு பதில் தினசரி ரூ.50 உணவுப்படி வழங்க தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. சென்னை மாநகராட்சியில் 24,264 தூய்மை பணியாளர்களுக்கு உணவுப்படி தர ரூ.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உணவுக்கு பதில் உணவுப்படி வழங்க 92% தூய்மை பணியாளர்கள் கேட்டுக் கொண்டதாக அரசாணையில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச உணவு வழங்கும் திட்டத்தை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் தேதி அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்திருந்தார். இதன் மூலம் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஷிப்ட் அடிப்படையில் பணி செய்து வரும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் தூய்மை பணியாளர்களுக்கு காலை, மாலை, இரவு என 3 வேளைகளிலும் இலவச உணவு வழங்கப்பட்டது.

இந்த நிலையில், இத்திட்டத்தை ரத்து செய்து இன்று தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. சுமார் 92 சதவீத தூய்மைப்பணியாளர்கள் தங்களுக்கு வழங்கப்படும் உணவிற்கு பதிலாக உணவுப்படி பணமாக வழங்க வேண்டும் எனவும், அது தங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் எனவும் தெரிவித்ததாக கூறப்பட்டுள்ளது.

உணவு வழங்கும் திட்டதிற்கு மாற்றாக தூய்மை பணியாளர்களுக்கு தினசரி ரூ.50 உணவுப் படி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 24,264 தூய்மை பணியாளர்களுக்கு உணவுப்படி வழங்க ரூ.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர்கள் சங்கம் (டிஎஃப்ஏபிஏ) 6-வது ஆண்டு பொதுக்குழு கூட்டம்



சென்னை 27, செப்டம்பர் 2026: தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர்கள் சங்கத்தின் (டிஎஃப்ஏபிஏ) 6-வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் (ஏஜிஎம்) நேற்று சென்னை, வடபழனியில் உள்ள ஹோட்டல் ஆதித்யாவில் நடைபெற்றது.

ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இப்பொதுக்குழு கூட்டத்தின் மூலம் சங்க உறுப்பினர்கள் ஒன்றுகூடி, தமிழ் திரையுலகம் தொடர்பான முக்கிய விஷயங்கள் குறித்து கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதுடன், சங்கத்தின் ஆண்டு கணக்குகள் மற்றும் புதிய முன்னெடுப்புகள் குறித்து விவாதித்து, உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெறுவது வழக்கம். இவ்வாண்டு கூட்டத்தில் 150-க்கும் மேற்பட்ட தயாரிப்பாளர் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், தமிழ்நாடு பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, தகவல் மற்றும் விளம்பரத் துறை மாண்புமிகு அமைச்சர் திரு. ஏ. ராஜ்மோகன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தமிழ் திரையுலகின் முக்கிய பிரச்சினைகள் குறித்து உரையாற்றியதுடன், தயாரிப்பாளர்களுடன் கலந்துரையாடினார்.

தமிழ்நாடு அரசிடம் டிஎஃப்ஏபிஏ கோரிக்கைகள் அடங்கிய மனு:

தமிழ் திரைப்படத் துறையின் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மையை கருத்தில் கொண்டு, பல்வேறு முக்கிய பிரச்சினைகளில் தமிழ்நாடு அரசின் ஆதரவையும் தலையீட்டையும் கோரி, டிஎஃப்ஏபிஏ சார்பில் மாண்புமிகு அமைச்சரிடம் விரிவான கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

சங்கம் முன்வைத்த கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் திரு. ஏ. ராஜ்மோகன் அவர்கள் விரிவாகப் பார்வையிட்டதுடன், ஒவ்வொரு கோரிக்கை குறித்தும், அவற்றை நிறைவேற்ற அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் தனது உரையில் விரிவாக எடுத்துரைத்தார்.

டிஎஃப்ஏபிஏ முன்வைத்த முக்கிய கோரிக்கைகள்:

1. 4% உள்ளாட்சி பொழுதுபோக்கு வரியை நீக்குதல். தற்போது தமிழ்நாட்டில் மட்டுமே நடைமுறையில் உள்ள இந்த வரியை நீக்க வேண்டும்.

2. தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகளை ஆண்டுதோறும் வழங்குதல், நிலுவையில் உள்ள ஆண்டுகளுக்கான விருதுகளையும் வழங்கி முடித்தல்.

3. சிறு முதலீட்டு திரைப்படங்களுக்கான நிலுவையில் உள்ள 11 ஆண்டுகளுக்கான மானியங்களை வழங்குதல், மேலும் மானியத் திட்டத்தை ஆண்டுதோறும் தொடர்ந்து செயல்படுத்துவதுடன், தற்போதுள்ள ரூ.7 லட்சம் மானியத்தை ரூ.10 லட்சமாக உயர்த்துதல்.

4. தமிழ்நாடு முழுவதும் திரைப்படப் படப்பிடிப்புகளுக்கு ஒற்றைச் சாளர (சிங்கிள் விண்டோ) அனுமதி முறையை அமல்படுத்துதல், குறிப்பாக மாநகர சாலைகளில் படப்பிடிப்பு நடத்துவதற்கான அனுமதியையும் எளிதாக்குதல்.

5. மூவி டிக்கெட் டிராக்கிங் சிஸ்டம்-ஐ செயல்படுத்துதல். ஒவ்வொரு காட்சிக்கும் திரையரங்க வசூல் விவரங்களை தயாரிப்பாளர்கள் ஆன்லைனில் உடனடியாக அறிந்து கொள்ளும் வகையில் இம்முறையை செயல்படுத்தி, வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதுடன், வருவாய் கசிவுகளையும் தடுக்க வேண்டும்.

6. தயாரிப்பாளர் சங்கங்கள் முன்மொழியும் புதிய ஓடிடி தளத்திற்கு தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நிதியுதவி வழங்குதல். சிறு முதலீட்டு தமிழ் திரைப்படங்களுக்கு பிரத்யேகமாக ஒரு ஓடிடி தளத்தை உருவாக்கி, அவற்றை பார்வையாளர்களிடம் கொண்டு சேர்ப்பதே இதன் நோக்கமாகும்.

7. திரைப்படத் திருட்டை (Piracy) கட்டுப்படுத்தவும், தடுக்கவும், தமிழ்நாடு அரசு ஆதரவுடன் தனியான Anti-Piracy அமைப்பை உருவாக்குதல்.

8. டிஜிட்டல் சினிமா ஆபரேட்டர்களால் வசூலிக்கப்படும் விர்ச்சுவல் பிரிண்ட் ஃபீ (விபிஎஃப்)-ஐ நீக்குதல். தயாரிப்பாளர்களின் நீண்டகால கோரிக்கையான இதற்கு தமிழ்நாடு அரசின் தலையீட்டை டிஎஃப்ஏபிஏ கோரியுள்ளது.

9. ஓடிடி வெளியீட்டு கால இடைவெளி (ஓடிடி விண்டோ) பிரச்சினைக்கு தீர்வு காண முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்துதல். தயாரிப்பாளர் சங்கங்கள், திரையரங்கு உரிமையாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் தமிழ்நாடு அரசு ஆகியோர் பங்கேற்கும் கூட்டத்தை நடத்தி, ஓடிடி விண்டோ மற்றும் விபிஎஃப் பிரச்சினைகளுக்கு நீடித்த தீர்வை உருவாக்க வேண்டும்.

சிறப்பான திரைப்படங்களை உருவாக்கிய தயாரிப்பாளர்களுக்கு கௌரவம்:

டிஎஃப்ஏபிஏ சார்பில் முதன்முறையாக, அக்டோபர் 2025 முதல் செப்டம்பர் 2026 வரை வெளியான குறிப்பிடத்தக்க மற்றும் வெற்றிகரமான தமிழ் திரைப்படங்களின் தயாரிப்பாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

திரையுலகிற்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்பை பாராட்டும் வகையில், தயாரிப்பாளர்களுக்கு கேடயம் மற்றும் பதக்கம் வழங்கப்பட்டது. கௌரவிக்கப்பட்ட பல தயாரிப்பாளர்கள் நேரில் கலந்து கொண்டு விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

கௌரவிக்கப்பட்ட திரைப்படங்களின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தயாரிப்பாளர் சமூகத்தின் சிறப்பான பங்கேற்பு:

இந்த ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் 150-க்கும் மேற்பட்ட தயாரிப்பாளர் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மேலும், தமிழ் திரையுலகின் முக்கிய பிரமுகர்களான திருமதி. குஷ்பு சுந்தர், திருமதி. சௌந்தர்யா ரஜினிகாந்த், திரு. விஜய் ஆண்டனி, திரு. கண்ணன் ரவி உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. ஜி.கே.எம். தமிழ் குமரன், இணைச் செயலாளர் திருமதி. சுஜாதா விஜயகுமார், டிஎஃப்ஏபிஏ-வின் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தமிழ் திரைப்படத் துறையின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக டிஎஃப்ஏபிஏ முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு, அவற்றை பரிசீலித்து நடவடிக்கை எடுக்க முன்வந்ததற்காக மாண்புமிகு அமைச்சர் திரு. ஏ. ராஜ்மோகன் அவர்களுக்கு டிஎஃப்ஏபிஏ தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.

தமிழ் திரையுலகின் வளர்ச்சிக்காக, தமிழ்நாடு அரசுடன் தொடர்ந்து கலந்துரையாடி, சீரான தொடர்பின் மூலம் மேற்கண்ட பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதுடன், தமிழ் திரைப்படத் துறையை மேலும் வலுப்படுத்த டிஎஃப்ஏபிஏ தொடர்ந்து செயல்படும்.

# ஒரு புதிய நகரத்திற்கு வரும் ஐந்து நண்பர்களின் எதிர்பாராத வாழ்க்கையை பேசும் 'பீட்சா பாய்ஸ்'!



சென்னை 27, செப்டம்பர் 2026: சொந்த ஊரின் பரிச்சயமான சூழலை விட்டு வெளியேறி, தங்களுக்கென ஒரு வாழ்க்கையை உருவாக்கும் கனவுகளுடன் புதிய நகரத்திற்குள் அடியெடுத்து வைக்கும் இளைஞர்களின் கதைகள் எப்போதுமே உற்சாகம் தரக்கூடியவை. வாழ்வாதாரம், நட்பு மற்றும் சிறந்த எதிர்காலத்தைத் தேடி பெங்களூரு செல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்த நண்பர்கள் கதைதான் 'பீட்சா பாய்ஸ்'. பெங்களூருவின் எனர்ஜி, இளமை, நட்பு, அன்பு மற்றும் எதிர்பாராத சந்திப்புகள் என இவர்கள் வாழ்க்கை மாறும் விதத்தை இந்த கதை பேசுகிறது.

அறிமுகமில்லாத நகரத்தில் வாழ்வாதாரத்தைத் தேடி பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் ஐந்து நண்பர்கள் 'பீட்சா பாய்ஸ்' திரைப்படத்தின் மையம். ஆரம்பத்தில் அவர்கள் எதிர்பார்த்ததை விட முற்றிலும் மாறுபட்ட சூழல்களுக்குள் அவர்களின் பயணம் அழைத்துச் செல்கிறது. படத்தின் கதைக்களம் குறித்து அதிகம் வெளிப்படுத்தாமல், இளமை துள்ளல், நட்பு, லட்சியம் மற்றும் எதிர்பாராத திருப்பங்கள் ஆகியவற்றை சமகாலப் பின்னணியில் சுவாரஸ்யமான கதையாக 'பீட்சா பாய்ஸ்' வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படத்தில், சிவம் சங்கர் நடிகராக அறிமுகமாகிறார். சரத் லோகிதாஷ்வா வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்கிறார். பிரபல நடிகர் ஷோபராஜ், இன்ஸ்பெக்டர் நாகராஜ் என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

செவன் ஹில்ஸ் சினி கிரியேஷன் நிறுவனத்தின் இரண்டாவது தயாரிப்பு இந்த படம். சங்கர் கே.என். மற்றும் சஹானா சங்கர் இப்படத்தைத் தயாரிக்கின்றனர். சேகர் கேசவ்சிரின் கதை, இயக்கம் மற்றும் இசை ஆகியவற்றை கவனித்துள்ளார். குருபிரசாத் ஒளிப்பதிவைக் கவனிக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு முழுவதுமாக பெங்களூருவில் நடைபெற்றுது. காந்தீரவா ஸ்டுடியோஸ் மற்றும் நகரின் முக்கியமான இடங்களில் பெரும்பாலான காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. மொத்தம் 42 நாட்கள் படப்பிடிப்பு நடைபெற்றுள்ளது.

இளம் கதாநாயகர்கள், நட்பை மையமாகக் கொண்ட கதை மற்றும் பெங்களூருவின் சமகால நகரப் பின்னணி ஆகியவற்றுடன் உருவாகும் 'பீட்சா பாய்ஸ்', வாழ்வாதாரத்தைத் தேடி சொந்த ஊர்களை விட்டு வெளியேறும் இளைஞர்கள் எதிர்பாராத அனுபவங்களில் சிக்கிக்கொள்ளும் வாழ்க்கையைப் புதிய கோணத்தில் எடுத்துக் காட்டும். இப்படத்தின் கூடுதல் நடிகர்கள், புரோமோஷன்ஸ் போன்ற விவரங்கள் அடுத்தடுத்து வெளியாகும்.

# இயக்குநர்கள் வெற்றி மாறன் - அமீர் ஆகியோரின் கூட்டறிக்கை





சென்னை 27, செப்டம்பர் 2026: ஜெம் கிரானைட்ஸ் வீரமணியின் கொடுஞ்செயல் பெரும் அதிர்ச்சியளிக்கிறது.

இந்த உலகைப்பற்றியே முழுதும் அறியாத பிஞ்சுச் சிறுமிகளை குறிவைத்து அரங்கேற்றப்பட்டுள்ள இந்தத் தீய செயல்கள் மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும்.

வீரமணியை பாதுகாக்க முயன்ற - அரசியல்வாதிகள், காவல்துறை அதிகாரிகள், அல்லது அதிகார மிக்க நபர்கள் என அனைவரும் விசாரிக்கப்பட்டு, பதவியிலிருந்து நீக்கப்பட்டு, சட்டத்தின் முன் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.

மேலும், பாலியல் துன்புறுத்தலால் அதிர்ச்சிக்குள்ளான அந்த சிறுமிகளுக்குத் தேவையான சட்ட, உளவியல் மற்றும் சமூக மறுவாழ்வு அளிக்கப்படுவதோடு, அவர்களின் அடையாளமும் கண்ணியமும் கண்டிப்பாக பாதுகாக்கப்பட வேண்டும்.

இனி வருங்காலங்களில் பெண்கள் சிறுமிகள் சிறுவர்கள் மீது பாலியல் தொல்லை கொடுக்கும் குற்றவாளிக்கு எந்தவித தளர்வுகளும் இன்றி மிகக் கடுமையான தண்டனை வழங்கப்படுவதே இது போன்ற குற்றச் செயல்கள் இனி நடைபெறாமல் இருக்க வழி வகை செய்யும்.

வீரமணியின் இந்த வழக்கை விசாரிக்கும் சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) எந்தவித அழுத்தத்திற்கும் ஆளாகாமல் நேர்மையான விசாரணையை நடத்த வேண்டும்.

மேலும் மனித நேயத்தை கேள்விக் குறியாக்கும் பாலியல் குற்றங்களை செய்பவர்கள் எவராயினும் அவர்களுக்கு எதிராகவே எங்களுடைய குரல் எப்போதும் ஒலிக்கும்.

இப்படிக்கு வெற்றி மாறன், அமீர்.

# நடிப்பவர்களுக்கு வாக்களித்தால் மக்கள் பிரச்னை தீராது: பிரேமலதா எம்எல்ஏ காட்டம்



சென்னை 27, செப்டம்பர் 2026: நடிப்பவர்களுக்கு வாக்களித்தால் மக்கள் பிரச்னை தீராது என்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கூறினார்.

தேமுதிக பொதுச் செயலாளரும் எம்எல் ஏவுமான பிரேமலதா விஜயகாந்த் விருத்தாச்சலத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஆளுங்கட்சி களத்திற்கு வராமல் அங்கேயே உட்கார்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது. மக்கள் ஓட்டு போட்டு இருக்கிறார்கள். அனைவரும் களத்திற்கு வர வேண்டும். நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு மூட்டைக்கு பத்து ரூபாய் என்பது பத்தாது. விலைவாசி அந்த அளவிற்கு ஏறிவிட்டது. இதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். ஆனால் அரசின் கவனம் வேறு எங்கேயோ இருக்கிறது. இடைத்தேர்தல் வேறு வந்து விட்டது. தேவையில்லாமல் ராஜினாமா செய்து இவர்களாகவே ஒரு இடைத்தேர்தலை கொண்டு வந்து விட்டார்கள்.

நேர விரயம் பண விரயம் தான். லஞ்சமே இல்லாத நேர்மையான ஆட்சி என்கிறார்கள். யார் மக்களுக்காக பேசுகிறார்கள், யார் மக்களுக்காக உழைக்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ரீல்ஸ் போடுவது, போட்டோ ஷூட் பண்ணுவது இவர்களைதான் மக்கள் நம்புகிறார்கள். யார் மக்களை நேசிக்கிறார்கள், யார் மக்களுக்காக உழைக்கிறார்கள் என்று பார்த்து அவர்களுக்கு மக்கள் துணை நில்லுங்கள், நடிப்பவர்களுக்கு வாக்களித்தால் மக்கள் பிரச்னை தீராது, இவ்வாறு அவர் கூறினார்.

# பிரதமர் பெற்ற நினைவுப் பொருட்கள் மின்னணு ஏலம் மகாராஷ்டிராவின் வரலாற்றுப் பாரம்பரியம் மிளிரும் கலைச் சின்னங்கள் இடம் பெறுகின்றன



சென்னை 27, செப்டம்பர் 2026: மகாராஷ்டிரா மாநிலத்தின் வளமான வரலாற்றுப் பாரம்பரியம், ஆன்மீக மரபுகள், பூர்வீகக் கலை வடிவங்கள், சமகால சாதனைகள் ஆகியவை பிரதமருக்கு வழங்கப்பட்ட நினைவுப் பொருட்களுக்கான மின்னணு ஏலத்தில் பிரதிபலிக்கின்றன.

இம்மாநிலத்தின் பன்முகத்தன்மை கொண்ட கலாச்சாரப் பின்னணியை வெளிப்படுத்தும் வகையில், சிற்பங்கள், ஓவியங்கள், கலைப் படைப்புகள், நினைவுச் சின்னங்கள், விளையாட்டுத் துறை சார்ந்த நினைவுப் பொருட்கள் எனப் பல்வேறு வகையான பொருட்கள் இந்த ஏலத்தில் இடம் பெற்றுள்ளன.

சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் நீடித்த பாரம்பரியத்தை சித்தரிக்கும் பொருட் கள், மராட்டிய மன்னரை வெவ்வேறு வடிவங்களிலும், கலைப் பாணிகளிலும் சித்தரிக்கும் பல வகையான நினைவுப் பொருட்கள் இந்தத் தொகுப்பில் உள்ளன. குதிரை மீது அமர்ந்திருப்பது, சிம்மாசனத்தில் வீற்றிருப்பது, சிங்கத்துடன் இருப்பது, அரச விழாக்களில் இருப்பது போன்ற தோற்றங்களில் உள்ள சிலைகள் இதில் அடங்கும். மேலும், ராய்காட் கோட்டையில் உள்ள மேகதாம்பரியின் மாதிரி வடிவம், வெள்ளிச் சிலை, மரச்சிற்ப ஓவியம் உள்ளிட்ட கலைப் படைப்புகள் ஆகியவையும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

# குதர்க்கமான கேள்வி கேட்ட பாகிஸ்தான் நிருபர்.! ஒற்றை வரியில் பதிலடி கொடுத்த அமைச்சர் ஜெய்சங்கர்

சென்னை 27, செப்டம்பர் 2026: ஐ.நா சபையின் தலைமையகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் பாகிஸ்தான் செய்தியாளர் கேட்ட குதர்க்கமான கேள்விக்கு, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் சரியான பதிலடி கொடுத்துள்ளார்.

நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை (யூஎன்) தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று பேசிய அமைச்சர் ஜெய்சங்கர், செய்தியாளர்களின் கேள்விகளுக்கு போர்மையாக பதில் அளித்து கொண்டிருந்தார். அப்போது பாகிஸ்தான் ஊடகத்தை சேர்ந்த செய்தியாளர் ஒருவர், "பாகிஸ்தானில் இந்தியா எப்போது பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதை நிறுத்தும்?" என்று குதர்க்கமாக கேள்வி எழுப்பினார். "ஒரு பயங்கரவாத நாடு என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்கிறது" என்று இந்த கேள்விக்கு சற்றும் தாமதிக்காமல் உரிய பதிலடி கொடுத்தார் அமைச்சர் ஜெய்சங்கர்.

இந்த கேள்வி எழுப்பிய குறிப்பிட்ட அந்த செய்தியாளரைப் பார்த்து "உங்களுக்கான பதிலை நீங்கள் தெளிவாக இப்போது புரிந்து கொண்டிருப்பீர்கள்" என ஐநாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி ஹரிஷ் பர்வத்தனேனி தெரிவித்ததும் அந்த செய்தியாளரின் முகத்தில் ஈயாடவில்லை.

# அதிமுக எம்.எல்.ஏ.க்களை பெட்டி கொடுத்து வாங்கியுள்ள தவெக - உதயநிதி ஸ்டாலின் பரப்புரை



சென்னை 27, செப்டம்பர் 2026: தாராபுரம் தொகுதி இடைதேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்து எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்போது பேசிய அவர் சென்று முறை உதயசூரியனை ஜெயிக்க வைக்க வாக்கு கேட்டு வந்தேன்.

ஆனால் நீங்கள் அதிமுக-விற்கு வாக்களித்து ஜெயிக்க வைத்தீர்கள். நீங்கள் தேர்வு செய்தவர் தற்போது உங்கள் முதுகில் குத்திவிட்டு ஓடி சென்று, ஆதாயத்திற்காக ஆளும் கட்சியில் சேர்ந்து கொண்டு மீண்டும் உங்களிடமே வாக்கு கேட்டு வருகிறார். அவருக்கு வாக்களித்து மீண்டும் தவறு செய்துவிடாதீர்கள்.

சட்டமன்ற தேர்தலில் தவெக-வுக்கு வெறும் 107 எம்.எல்.ஏ.க்களை தான் மககள் அளித்தனர். திமுக கூட்டணியில் அப்போதிருந்த சில கட்சிகள், குடியரசுத்தலைவர் ஆட்சி வந்துவிட கூடாது என்று காரணத்தை கூறி தவெக ஆட்சியமைக்க ஆதரவு அளிக்க சென்றனர். சிலர் சொல்லிவிட்டு சென்றனர், சிலர் சொல்லாமலேயே சென்றனர். அவர்கள் எல்லாம் யார் யார் என மக்களாகிய உங்களுக்கு தெரியும்.

7 அதிமுக எம்.எல்.ஏ.க்களை பெட்டி கொடுத்து தவெக வாங்கியுள்ளது. எம்எல்ஏ முதல் சபாநாயகர் வரை அனைவரும் பேரவையில் பாட்டுதான் பாடுகிறார்கள். பேரவையில் கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம்; அல்லது எதிர்கேள்வி கேட்கலாம். ஆனால் பாட்டு பாடினால் என்ன செய்வது? பிடித்து வைத்த பிள்ளையார் போல் பேரவையில் முதல்வர் விஜய் அமர்ந்திருக்கிறார். முதல்வர் விஜய் வாய் திறந்து பேசியதாக சரித்திரமே இல்லை. ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடமே வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன் என்றார், ஆனால் அப்படி எதையுமே அவர் செய்யவில்லை என உதயநிதி ஸ்டாலின் சாடி உள்ளார்.